www.Padasalai.Net www.CBSEtips.in

R

# முதல் இடைப்பருவ பொதுத்தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## சமூக அறிவியல்

நேரம் : 3.00 மணி  மதிப்பெண்கள் : 100

### பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.  14 x 1 = 14

1. ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்ச கட்டம் எனக் கூறியவர் யார்?
   அ) லெனின்  ஆ) மார்க்ஸ்  இ) சன்-யாட்-சென்  ஈ) மா-சே-துங்
2. பன்னாட்டுச் சங்கத்தின் முதல் பொதுச் செயலாளர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
   அ) பிரிட்டன்  ஆ) பிரான்ஸ்
   இ) டச்சு  ஈ) அமெரிக்க ஐக்கிய நாடுகள்
3. இத்தாலி யாருடன் லேட்டரன் உடன்படிக்கையைச் செய்து கொண்டது?
   அ) ஜெர்மனி  ஆ) ரஷ்யா  இ) போப்  ஈ) ஸ்பெயின்
4. அமெரிக்கா தனது முதல் அணுகுண்டை எங்கு வீசியது?
   அ) கவாசாகி  ஆ) டோக்கியோ  இ) ஹிரோஷிமா  ஈ) நாகசாகி
5. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.
   கூற்று : குடியரசுத்தலைவர் ரூஸ்வெல்ட் தனித்திருத்தல் கொள்கையிலிருந்து மாற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தார்.
   காரணம் : அவர் 1941-இல் கடன் குத்தகைத் திட்டத்தை தொடங்கினார்.
   அ) கூற்றும் காரணமும் சரி  ஆ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
   இ) காரணம் கூற்று ஆகிய இரண்டுமே தவறானவை
   ஈ) காரணம் சரி ஆனால் அது கூற்றுடன் பொருந்தவில்லை
6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு?
   அ) நர்மதா  ஆ) கோதாவரி  இ) கோசி  ஈ) தாமோதர்
7. தென்னிந்தியாவின் உயரமான சிகரம் ______.
   அ) ஊட்டி  அ) கொடைக்கானல்  இ) ஆனைமுடி  ஈ) ஜின்டா கடா
8. மேற்கத்திய இடையூறுகளால் மழைப்பொழிவைப் பெறும் பகுதி ______.
   அ) தமிழ்நாடு  ஆ) கேரளா  இ) பஞ்சாப்  ஈ) மத்திய பிரதேசம்
9. கரிசல்மண் ______ எனவும் அழைக்கப்படுகிறது.
   அ) வறண்ட மண்  ஆ) உவர் மண்  இ) பருத்தி மண்  ஈ) மலை மண்
10. பொருந்தாத விடையைத் தேர்வு செய்க.
    இந்தியாவின் காலநிலையைப் பாதிக்கும் காரணிகள்
    அ) அட்ச பரவல்  ஆ) உயரம்
    இ) கடலில் இருந்து அமைந்துள்ள தூரம்  ஈ) மண்
11. எந்த பிரிவின்கீழ் நிதிநிலை அவசர நிலையை அறிவிக்க முடியும்?
    அ) சட்டப்பிரிவு 352  ஆ) சட்டப்பிரிவு 356  இ) சட்டப்பிரிவு 360  ஈ) சட்டப்பிரிவு 368
12. மக்களவை தேர்தலில் போட்டியிட தேவையான குறைந்தபட்ச வயது?
    அ) 18 வயது  ஆ) 21 வயது  இ) 25 வயது  ஈ) 30 வயது
13. நாட்டு வருமானம் அளவிடுவது
    அ) பணத்தின் மொத்த மதிப்பு  ஆ) உற்பத்தியாளர் பண்டத்தின் மொத்த மதிப்பு
    இ) நுகர்வு பண்டத்தின் மொத்த மதிப்பு
    ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
14. காட் (GATT)-இன் முதல் சுற்று நடைபெற்ற இடம்
    அ) டோக்கியோ  ஆ) உருகுவே  இ) டார்குவே  ஈ) ஜெனிவா

### பகுதி - ஆ

II. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 28 கட்டாய வினா)  10 x 2 = 20

15. மூவர் கூட்டு நாடுகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
16. பதுங்குக்குழி போர் முறையைக் குறித்து நீங்கள் அறிந்ததென்ன ?

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner

www.Padasalai.Net www.CBSEtips.in



17. டாலர் ஏகாதிபத்தியம் - தெளிவுபட விளக்குக.
18. முத்துத் துறைமுகம் நிகழ்வை விவரி.
19. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
20. இந்தியாவின் அண்டை நாடுகளின் பெயர்களைக் கூறுக.
21. தக்காண பீடபூமி - குறிப்பு வரைக.
22. பருவமழை வெடிப்பு என்றால் என்ன?
23. வேளாண்மை - வரையறு.
24. அரசியலமைப்பு என்றால் என்ன?
25. உச்சநீதிமன்ற நீதிபதி ஆவதற்கான தகுதிகள் யாவை?
26. நாட்டு வருமானம் - வரையறு.
27. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
28. நியாயமான வர்த்தகம் என்றால் என்ன?

பகுதி - இ

III. ஏதேனும் 10 வினாக்களுக்கு விடையளி (வினா எண் 42 கட்டாய வினா) 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக :
அ) ______ ஆம் ஆண்டில் ஜப்பான் சீனாவுடன் வலுக்கட்டாயமாகப் போரிட்டது.
ஆ) போயர்கள் ______ என்றும் அழைக்கப்பட்டனர்.
இ) இந்திய அரசியலமைப்பு ஏற்றுக்கொள்ளப்பட்ட நாள் மற்றும் ஆண்டு ______.
ஈ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன் ______ ஆகும்.
உ) இந்தியாவில் ______ துறை முதன்மை துறை ஆகும்.
30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31. பன்னாட்டுச் சங்கத்தின் பணிகளை மதிப்பிடுக.
32. இரண்டாம் உலகப்போரின் விளைவுகளை ஆய்வு செய்க.
33. ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு செயல்பாடுகளை ஆய்வு செய்க.
34. இமயமலையின் உட்பிரிவுகளையும் அதன் முக்கியத்துவம் பற்றியும் விவரி.
35. தீபகற்ப ஆறுகளைப் பற்றி விவரி.
36. தென்மேற்கு பருவக்காற்று குறித்து எழுதுக.
37. அடிப்படை உரிமைகளைக் குறிப்பிடுக.
38. இந்தியப் பிரதம அமைச்சரின் பணிகள் மற்றும் கடமைகள் யாவை?
39. GDP-ஐ கணக்கிடும் முறைகள் யாவை? அவைகளை விவரி.
40. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
1900 - 1930 வரையிலான ஐந்து முக்கிய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. உலக வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
அ) இங்கிலாந்து ஆ) ஜெர்மனி இ) ஜப்பான்
ஈ) இத்தாலி உ) ரஷ்யா

பகுதி - ஈ

IV. விரிவான விடையளிக்கவும். 2 x 8 = 16

43. அ) முதல் உலகப் போருக்கான முக்கிய காரணங்களை விவாதி. (அல்லது)
ஆ) ஜெர்மனியில் ஹிட்லரின் எழுச்சிக்கு இட்டுச்சென்ற சூழ்நிலைகளைக் கோடிடவும்.
44. இந்திய வரைபடத்தில் கீழ்காணும் இடங்களைக் குறிக்கவும்.
i) K2 ii) மேற்கு தொடர்ச்சி மலை iii) தக்காண பீடபூமி
iv) கங்கை ஆறு v) வட கிழக்கு பருவ காற்று வீசும் திசை vii) கரிசல் மண்
viii) சணல் விளையும் பகுதி viii) சென்னை

* * * * * *

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
CamScanner